## பெண் சாதனையாளர்களை கௌரவித்தல் - சர்வதேச மகளிர் தினம் 2023

## மகளிர் விவகார அமைச்சு, வடக்கு மாகாணம்

எமது அமைச்சினால் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கொண்டாடப்படவுள்ள சர்வதேச மகளிர் தினத்தில் பெண் சாதனையாளர்களை கௌரவிக்கும் முகமாக வடமாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட பல்வேறுபட்ட துறைசார் பெண் சாதனையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர்கள் பின்வரும் அடிப்படை தரவுகளுடன் சாதனையாளர் என்பதற்கான ஆதாரத்தினையும் இணைத்து அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் தாங்கள் பிறிதொருவரை பரிந்துரைக்க விரும்பின் தங்களுடைய விபரங்களுடன் (முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இல, தொலைபேசி இல.) பரிந்துரைக்கப்பட்டவரின் கீழ்வரும் அடிப்படை தரவுகள் உள்ளடங்கலாக விண்ணப்பங்களை அனுப்பிவைக்க முடியும்.

எமக்கு கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் மதிப்பீட்டுக் குழுவினரால் சாதனையாளர்கள் தெரிவானது நடைபெறும். நடுவர்களின் முடிவே இறுதியானதாகும்.

**விண்ணப்ப தலைப்பு :** பெண் சாதனையாளர்கள் தெரிவு (கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும்)

**விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற வேண்டிய இறுதித் திகதி:** 16.01.2023

**விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற வேண்டிய முகவரி:**
செயலாளர், மகளிர் விவகார அமைச்சு, வ.மா, இல. 04, புரூடி ஒழுங்கை, புங்கன்குள சந்தியடி, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

### பெண் சாதனையாளர்களை கௌரவித்தல் - சர்வதேச மகளிர் தினம் 2023

### மகளிர் விவகார அமைச்சு, வ.மா

01. பெண் சாதனையாளர் முழுப் பெயர் :
02. தேசிய அடையாள அட்டை இல. :
03. முகவரி :
04. தொலைபேசி இல. :
05. சாதனைத் துறை :
06. தாங்கள் சாதனையாளராக விண்ணப்பிப்பதற்கான காரணம் :
07. சாதனையாளர் என்பதற்கான ஆதாரங்கள் :
    (விபரங்கள் இணைப்பில் குறிப்பிடப்பட வேண்டும்)

இது தொடர்பான விபரங்களை **www.np.gov.lk** எனும் web site இல் பார்வையிடலாம்.

*செயலாளர்*
*மகளிர் விவகாரம், புனர்வாழ்வளித்தல், சமூக சேவைகள், கூட்டுறவு, உணவு வழங்கலும் விநியோகமும், தொழிற்துறையும் தொழில் முனைவோர் மேம்பாடும் மற்றும் வர்த்தகமும் வாணிபமும் அமைச்சு*
*வடக்கு மாகாணம்.*

**தொ. இல : 021 222 0884, 021 222 0883**

**09.12.2022**